සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය

**சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு**

**MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல** DSD/HO/MF/BR/05<br>**My No** | ඔබේ අංකය<br>**உமது இல** ..........................................<br>**Your No** | දිනය<br>**திகதி** **2017.03.17**<br>**Date** |

**சுற்று நிருபம் :- ச.ச.அ.வ. 2017/06**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் மற்றும்
வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்,

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களை பதிவு செய்தல்</u>**

2013 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சமுர்த்திச் சட்டத்திற்கு அமைவாக விடயத்துக்கு பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களினால் 2009/08 ஆம் இலக்க 2017.03.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் அனைத்தும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். இவ் வங்கிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் திணைக்களத்தின் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான ஆலோசணைகள் இக் கடிதத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் எனப்படும் நிறுவனங்கள் பதிவு செய்யப்படுகின்ற பெயரில் ஒரு கூட்டிணைக்கப்பட்ட சபையாக இருப்பதுடன். தொடர்ச்சியான இயங்கு தன்மையையும் ஒரு இலட்சினையும் கொண்டதாக இருக்கும். சுயமாக தனது பெயரில் வழக்கினை தாக்கல் செய்வதற்கும் மற்றும் இதற்கு எதிராக வழக்கினை தொடர்வதற்குமான சட்ட அங்கீகாரத்தினை பெறுகின்றது. (சமுர்த்தி சட்டத்தின் 25(3) மற்றும் 29 (3) சரத்துகள்)

**<u>(1) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை பதிவு செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்</u>**

கீழ்வரும் ஆலோசனைகளை பின்பற்றி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் பொதுச்சபை மற்றும் கட்டுப்பாட்டுச் சபைகளுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தல் வேண்டும். இதன் பிரகாரம் சமுதாய அடிப்படை வங்கிகளின் பொதுச் சபைக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு இதற்கு முன்னர் பின்பற்றிய முறைமைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**<u>(அ) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் பொதுச்சபை</u>**

இச் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் செயலாளரின் (முகாமையாளரின்) கட்டளையின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தனது அதிகாரப் பிரதேசத்தினுள்ளான கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் உரிய சமுதாய அடிப்படை அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் சமுதாய அடிப்படை வங்கியின் பங்காளர்களை ஒன்று கூட்டி பங்காளர்களின் ஆரம்ப அறிமுகக் கூட்டத்தினை நடாத்ததுல் வேண்டும். இப்பங்காளர்களின் ஆரம்பக் கூட்டத்தில் பொதுச்சபையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதிநிதிகள் பத்துக் பேருக்கு (10) மேற்படாத தொகையினை தெரிவு செய்து அவர்களின் தகவல்களை சமுதாய அடிப்படை வங்கிச் செயலாளருக்கு வழங்குதல் வேண்டும். இத் தகவல்களை செயலாளருக்கு வழங்கும்


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍ය ක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යාක්ෂ(මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍ර ධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ(ක්ෂුද්‍ර මූල්‍ය )<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | **Hot Line: 011- 2887722** |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | **Hot Line:0112-885582** | |
| | | **Hot Line : 0112-889007** | | | |

போது பிரதிநிதியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, அவர் அங்கத்துவம் வகிக்கும் சமுதாய அடிப்படை அமைப்பின் பெயர், கிராம சேவர் பிரிவின் பெயர், ஆகிய தகவல்களுடன் விசேடமாக அவரது அதிகார பிரதேசத்தின் மொத்த பங்காளர்களின் எண்ணிக்கையினையும் குறிப்பிடல் வேண்டும். இவ்வாறே சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் பொதுச் சபைக்கான பங்காளர்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு கலண்டர் ஆண்டிலும் முதல் காலாண்டுக்குள் இப் பொதுச்சபைக் கூட்டத்தினை கூட்டுதல் வேண்டும். இக் கூட்டத்தினை கூட்டும் போது பகிரங்கமான அறிவித்தல் ஒன்றினை விடுத்து கூட்டுதல் வேண்டும். சமுதாய அடிப்படை வங்கியின் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் இவ்வாறான பங்காளர்களின் அறிமுக கூட்டத்தினை நடாத்தி 14 நாட்களுக்குள் பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும். பழைய முறையமையினைப் பின்பற்றி கட்டுப்பாட்டுச் சபையினை தெரிவு செய்திருப்பின் சமுர்த்தி சமுதாய அமைப்பினை உருவாக்கும் பொருட்டு அல்லது இவ் ஆலோசனைகளை பின்பற்றி தலைவர் மற்றும் உப தலைவர் உட்பட 15 பேர் கொண்ட புதிய கட்டுப்பாட்டு சபையினை தெரிவு செய்து அந்த அறிக்கையுடன் வங்கியினை பதிவு செய்யும் விண்ணப்பப்படிவத்தினையும் பூர்த்தி செய்து **2017 ஜுன் 10 ஆம் திகதிக்கு முன்னர்** சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**<u>(ஆ) விசேட பொதுச் சபைக் கூட்டம்</u>**

மொத்த அங்கத்தவர்களில் ¼ பங்கினருக்கு குறையாத எண்ணிக்கையினர் ஒப்பமிட்டு பொதுச் சபைக் சுட்டத்தினை கூட்டுமாறு தலைவரிடம் கோரும்பட்சத்தில் தலைவர் விசேட பொதுச் சபைக் கூட்டத்தை கூட்டுமாறு கட்டளையிடலாம்.

கட்டுப்பாட்டுச் சபையில் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்கான தேவையினை முன்வைத்து அதற்கான தீர்மானம் எடுக்கப்படும் சந்தர்ப்பத்திலும் விசேட பொதுச் சபைக் கூட்டத்தினை கூட்டலாம்.

**<u>(இ) கட்டுப்பாட்டு சபைக் கூட்டம்</u>**

முகாமைத்துவத்தின் தேவைக்கு ஏற்ப அடிக்கடி கட்டுப்பாட்டுச்சபைக் கூட்டங்களை நடாத்த முடியும். எனினும் குறைந்தபட்சம் மாதம் இரு முறையாவது கட்டுப்பாட்டு சபைக் கூட்டத்தினைக் நடாத்துதல் வேண்டும்.

**<u>(ஈ) பொதுச் சபை மற்றும் கட்டுப்பாட்டுச்சபையின் கோரம்</u>**

கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்துக்கு செயலாளர் (முகாமையாளர்) தவிர கோரம் 05 பேராக அமைவதுடன் பொதுச் சபைக்கான கோரம் மொத்த அங்கத்தவர் தொகையில் 1/3 பங்கினருக்கு சமமான தொகையினர் இருத்தல் வேண்டும்.

**<u>(உ) வாக்களிக்கும் உரிமை</u>**

பங்காளர்களின் ஆரம்பக் கூட்டத்திலிருந்து பொதுச் சபைக் கூட்டத்துக்கு கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை காணப்படுவதுடன் செயலாளருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை.

பொதுச் சபைக் கூட்டத்தில் சில சாதாரண யோசணைகளுக்கான அங்கீகாரத்தினை பெறுவதற்கு அங்கு வருகை தந்துள்ள அங்கத்தவர்களில் கூடுதலானவர்களின் அல்லது அரைவாசிக்கு மேற்பட்டவர்களின் சம்மதம் போதுமானதாகும். ஆனால் விசேடமான ஏதேனும் யோசனைகளுக்கான அனுமதியினை பெறுவதற்கு வருகை தராமல் இருக்கும் அங்கத்தவர்கள் உட்பட மொத்த அங்கத்தவர் தொகையில் 2/3 பங்கினருக்கு குறையாதவர்களின் வாக்குப் பலத்தால் உரிய யோசணைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

**<u>(ஊ) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியினை முகாமை செய்தல்</u>**

இச் சமுதாய அடிப்படை வங்கியின் முகாமைத்தவச் செயற்பாடுகள் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட்ட கட்டுப்பாட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் குறிக்கோள்களை (வாழ்வின் எழுச்சி சட்டத்தின் VI பிரிவின் 26 ''அ'' விலிருந்து ''ஈ'' வரை) இக் கட்டுப்பாட்டுச் சபையினரே நிறைவேற்றுதல் வேண்டும்.

காலத்திற்கு காலம் விதிமுறைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு உட்பட்ட விதத்தில் தற்போதைய கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை செயலாளர் தவிர 15 பேர் ஆகும்.

எவ்வாறாயினும் வங்கியின் அதிகாரப் பிரதேசத்துக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 15 தை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் இவ் வங்கியின் அதிகாரப் பிரதேசத்துக்கு உட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் ஒன்றினைத்து சராசரியாக பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய விதத்தில் கட்டுப்பாட்டுச் சபைக்குரிய உறுப்பினர்களை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியாக இரண்டு வருடத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு ஒரு உறுப்பினர் கட்டுப்பாட்டுச் சபைக்கு தெரிவு செய்ய முடியாது என்பதுடன் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் தொடர்ச்சியாக இரண்டு தடவைகளுக்கு மேல் அப்பதவியினை வகிக்கவும் முடியாது.

வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் சுயாதீனமாக அல்லது முன்மொழிவுகளுடன் அங்கத்தவர்களின் வாக்குகளால் கட்டப்பாட்டுச் சபை தெரிவு செய்யப்படல் வேண்டும்.

கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினரின் பதவிக் காலம் ஒரு வருடமாகும். ஒவ்வொரு ஆண்டுப் பொதுச் சபை கூட்டத்திலும் செயலாளர் தவிர அனைத்து கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களும் தங்களது பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டியதுடன் அங்கத்தவர்களின் விருப்பப்படியே மீண்டும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

## (2) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களை பதிவு செய்வதற்கான நடைமுறைகள்.

சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களை பதிவு செய்யும் பொருட்டு கீழ்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

### (அ) சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் அங்கத்தவம்

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்துக்கு உட்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளில் இருந்தே இச் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் அங்கத்துவத்துவம் பெறப்படல் வேண்டும். மேலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர்களே இச் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பொதுச் சபையை பிரதிநிதித்துவப்படுத்துவர்.

இச் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பங்குகளுக்கு அதன் அதிகாரப் பிரதேசத்துக்குட்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளால் மாத்திரமே பங்களிப்புச் செய்யமுடியும்.

அதிகாரப் பிரதேசத்துக்கு உட்பட்ட அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் குறைந்தது ஒரு பங்கினையாவது கொள்வனவு செய்து இச் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் மூலதனத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

அங்கத்துவத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஒரு பங்கினை கொள்வனவு செய்வது போதுமானதாகும். பிற சட்டரீதியான கட்டளை ஒன்று அமுலாகும் வரை ஒரு பங்கின் பெயரளவு பெறுமானம் ரூபா 1000/= ஆகும்

### (ஆ) பொதுச் சபை

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பொதுச் சபையாக அச் சங்கத்தின் கீழ் இயங்கும் அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும்.

### (இ) ஆண்டுப் பொதுச் சபைக் கூட்டம்

ஒவ்வொரு கலண்டர் வருடத்துக்கும் ஒரு தடவை அந்தந்த வருடத்தின் முதற் காலண்டிற்குள் வருடாந்த பொதுச் சகைக் கூட்டம் என அழைக்கப்படுகின்ற அங்கத்வர்களின் கூட்டம் நிறைவேற்றுச் சபையின் கட்டளைக்கு அமைய நிறைவேற்றுச் சபையின் செயலாளரால் நடத்தப்படல் வேண்டும். அதற்கு சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தினுள் இயங்கும் அனைத்து சமுதாய அடிப்படை வங்கிகளின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் மாத்திரம் அழைக்கப்படல் வேண்டும்.

**(ஈ) விசேட பொதுச் சகைக் கூட்டம்**

அங்கத்தவர்களில் ¾ பங்கினருக்கு குறையாத எண்ணிக்கையினர் ஒப்பமிட்டு பொதுச் சபைக் கூட்டத்தினைக் கூட்டுமாறும் தலைவருக்கு எழுத்துமூலம் கோரும்பட்சத்தில் தலைவர் விசேட பொதுச் சபையினை கூட்டுமாறு கட்டளையிட முடியும்.

நிறைவேற்றுச் சபையில் விசேட பொதுச் சபையினை கூட்டுவதற்கான தேவையினை முன்வைத்து அதற்கான தீர்மானத்தை எடுக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விசேட பொதுச் சபையினை கூட்ட முடியும்.

**(உ) நிறைவேற்றுச் சபைக் கூட்டம்**

முகாமைத்துவத்தின் தேவைக்கு ஏற்ப அடிக்கடி நிறைவேற்றுச் சபைக் கூட்டங்களை கூட்ட முடியும் எனினும் குறைந்தபட்சம் மாதம் ஒரு முறையாவது நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.

**(ஊ) கோரம்**

நிறைவேற்றுச் சபை கூட்டத்துக்கான கோரம் செயலாளர் தவிர 05 பேர் ஆகும் என்பதுடன் பொதுச் சபைக்கான கோரம் மொத்த அங்கத்தவர் தொகையில் 1/3 பங்கிற்கு சமமான எண்ணிக்கையினராகும்.

**(எ) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் நிறைவேற்றுச் சபையினை தெரிவு செய்தல்**

இச் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகள் தலைவர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட ஒரு சபையின் மூலம் மேற்கொள்ளப்படும். இன் நிறைவேற்றுச் சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை விதிமுறைகளில் ஏற்படும் மாற்றத்துக்கு உட்பட்ட விதத்தில் செயலாளர் தவிர குறைந்தது 07 பேர் ஆகும். கூடியது அச் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் எண்ணிக்கைக்கு சமமான தொகையினராகும். உதாரணமாக ஒரு சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தினுள் 10 வங்கிகள் காணப்படின் நிறைவேற்றுச் சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய அதிகூடிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10 ஆகும். நிறைவேற்றுச் சபையினுள் ஒரு பிரேரணையினை நிறைவேற்றுதல் தொடர்பான சந்தர்ப்பங்களில் அதன் செயலாளருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லாதிருப்பதுடன் வாக்குப்பலம் சமமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் தலைவருக்கு தீர்மானிக்கும் வாக்கு உரித்தாகும். வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் குறிக்கோள்களை (சட்டத்தின் (VII) ஆம் பிரிவின் 30 "அ" வில் இருந்து "இ" வரை) நிறைவேற்றுச் சபையினால் நிறைவேற்றப்படல் வேண்டும்

செயலாளர் தவிர்ந்த ஏனைய நிறைவேற்றுச் சபையின் அங்கத்தவர்கள் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் மூலம் தெரிவு செய்ப்படல் வேண்டும். சுய விருப்பில் அல்லது அங்கத்தவர்களின் வாக்குகள் மூலம் நிறைவேற்றுச் சபை அங்கத்தவர்கள் தெரிவு .செய்ப்படுவதுடன் பிரதேச செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி தெரிவத்தாட்சி அதிகாரியாக செயற்படல் வேண்டும். பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவு செய்ப்பட்ட நிறைவேற்றுச் சபை அங்கத்தவர்களில் இருந்து ஒரு தலைவர் மற்றும் ஒரு உப தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஒரு அங்கத்தவர் தொடர்ச்சியாக இரண்டு தடவைகளுக்கு மேல் தலைவர் பதவியினை வகிக்க முடியாது.

பதவி வழியாக குறித்த சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் சிரேஸ்ட முகாமையாளர் நிறைவேற்றுக் குழுவின் செயலாளராக இருப்பார். இவ் ஆலோசனைகள் வழங்குவதற்கு முன்னர் நிறைவேற்றுச் சபை தெரிவு செய்யப்பட்டிருப்பினும் இவ் ஆலோசனைகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று சபையின் விபரங்கள் மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினை பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் என்பவற்றை **2017 ஜூன் 10 ஆம் திகதிக்கு முன்னர்** திணைக்களத்தின் குறுநிதி பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**(ஏ) வாக்களிக்கும் அதிகாரம்**

பொதுச் சபைக் கூட்டங்களில் ஏதும் முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான வாக்களிக்கும் உரிமை காணப்படுவது சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பொதுச் சபையினை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்டப்பாட்டுச் சபை உறுப்பினருக்கு மாத்திரமே ஆகும்.

மேற் குறிப்பிட்ட ஆலோசனைகளின் பிரகாரம் உரிய கூட்டங்களைக் கூட்டி கட்டப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் மற்றும் நிறைவேற்றுச் சபை அங்கத்தவர்களை நியமித்து **2017 ஜுன் 10 ஆம் திகதிக்கு முன்னர்** சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கத்துக்கான வருடாந்த பதிவுக் கட்டணம் ரூபா 1000/= ஆகும். இவ் ஆலோசனைகளின் பிரகாரம் வங்கிப் பதிவுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கத்துக்கு பதிவுக்கான சான்றிதழ் சமுர்த்தி திணைக்களத்தினால் வழங்கப்படும். உரிய பதிவுச் சான்றிதழை தனது வாடிக்கையாளர்களுக்கு தெரியக் கூடிய விதத்தில் காட்சிப்படுத்தல் வேண்டும். சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் உரிய நிதி நிலமை கூற்றுக்களை சமர்பிக்கும் போது பதிவுக்காக முன்வைக்சகின்ற வருடத்திற்கு முந்திய வருடத்தின் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒவ்வொரு கலண்டர் வருடமும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை புதுப்பித்துக் கொள்ள வேண்டியதுடன் அப் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டமைக்கான கடிதம் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவினரால் வழங்கப்படும். உரிய முறைப்படி விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்காத சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதுடன் உரிய திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் பொருட்டு 25% தண்டப்பணத்துடன் விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இச் செயற்பாட்டிற்கு கீழ் குறிப்பிடப்படும் கணக்கினை ஆரம்பித்து பதிவுக் கட்டணத்தினை அனுப்பிவைத்தல் வேண்டும்.

செலவுக் கணக்கு – பற்று - சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிப் பதிவுக் கட்டணக் கணக்கு
(சமுதாய அடிப்படை வங்கி, குறியீடு இலக்கம் - 2141)

பற்று – சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க பதிவுக் கட்டணக் கணக்கு (குறியீட்டு இலக்கம் - 3213)

**பொதுவான விடயங்கள்**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் எதிர்காலச் செயற்பாடுகள் வாழ்வின் எழுச்சி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாகவும், இவ் ஆலோசனை, ஒழுங்கு விதிகள் மற்றும் பிரமானங்களுக்கமைய மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தின் பொருட்டு தற்போது செயற்பாட்டில் உள்ள யாப்புகள் செல்லுபடியற்றதாகின்றது. சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தினை உரிய ஆலோசனைகளின் பிரகாரம் குறித்த திகதிக்குள் பதிவு செய்ய வேண்டியது உரிய முகாமையாளரின் பொறுப்பாகும் என்பதையும் நினைவுபடுத்துகின்றேன்.

இப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமாயின் 011-3054528 மற்றும் 011-2887469 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி உரிய வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :-

1) செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - தகவலுக்காக

2) சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்

3) சகல பிரதேச செயலாளர்களுக்கும் - தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்

4) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்

Translated by : I. Aliyar